சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99446 16559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 172 16.12.2025 TUESDAY MARGAZHI : 1 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 172 16.12.2025 செவ்வாய்கிழமை மார்கழி : 1 விலை : ரூ.5/-

3 பார்லிமென்டில் எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளி: லோக்சபா ஒத்திவைப்பு

4 முல்லைப் பெரியாறு அணையை துணை கண்காணிப்பு குழு ஆய்வு

2 சத்தமில்லாமல் புதுக்கட்சி தொடங்கிய ஓபிஎஸ்: டிச.23ம் தேதி முறைப்படி அறிவிக்க திட்டம்

## 'தமிழ்நாடு ஹஜ் இல்லம்': டிச.16ல் அடிக்கல் நாட்டுகிறார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை: டிச.16-

புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய மக்களுக்கு உதவும் வகையில் கட்டும் தமிழ்நாடு ஹஜ் இல்லம் திறக்கப்பட இருக்கிறது. இந்நிலையில், சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் டிச.16 ம் தேதி முதல்வர் ஸ்டாலின் இதற்காக அடிக்கல் நாட்டுகிறார்.

இது குறித்து தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை நோக்கம் எல்லோருக்கும் எல்லாம் என்பதே ஆகும். அரசு நிறைவேற்றும் திட்டங்கள் அனைத்தும் சமத்துவத்தை நிலைநாட்டும் வகையில் செயல்படுத்தி வருவது இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும்.

முதல்வர் ஸ்டாலின் தமிழ்நாட்டில் வாழும் அனைவரையும் போல் சிறுபான்மையின மக்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து வருகிறார். இஸ்லாமிய சமுதாய மக்கள் ஹஜ் பயணம் மேற்கொள்வதை அவர்களின் வாழ்நாள் கடமைகளில் முக்கியமானதாகக் கருதுகிறார்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஹஜ் பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் சென்னை வரும் இஸ்லாமியர்கள் பயணம் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாகச் சென்னை வந்து தங்கி சென்னை விமான நிலையம் வழியாக ஹஜ் பயணம் செல்வதற்கு வசதியாக விமான நிலையத்துக்கு அருகில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும் என 2.3.2025 அன்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பின்படி சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் நங்கநல்லூரில் ஒரு ஏக்கர் அரசு நிலப்பரப்பில் 39 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 400 ஹஜ் புனித பயணிகள் தங்குவதற்கு ஏற்ப தமிழ்நாடு ஹஜ் இல்லக் கட்டிடம் கட்டுவதற்கு முதல்வர் டிச.16ம் தேதி காலை 10 மணி அளவில் அடிக்கல் நாட்டுகிறார்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி ஆசியுடன் உரிமம் இல்லாத மாவு மில்...

### பூந்தமல்லி பொதுமக்கள் கொதிப்பு...

பூந்தமல்லி, டிச.16-

சென்னை மாநகராட்சி பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ கிருஷ்ணசாமி ஆசியுடன் மாவு மில் இயங்கி வருகிறது என்பது பூந்தமல்லி வட்டாரத்தில் அனைவரும் தெரிந்த ஒன்று

சென்னை பூந்தமல்லி விஜயலட்சுமி நகரில் சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான ஸ்ரீ சாய் மாவு மில் கடந்த இரண்டு வருடங்களாக இயங்கி வந்தது.

ஆனால் சுப்பிரமணி என்பவரோ இந்த முகவரியில் ஸ்ரீ சாய் மாவு மில்லுக்கு உரிமம் வாங்க வில்லை என்று கூறப்படுகிறது. அருகில் உள்ள டூபாஸ் நகரில் உள்ள முகவரியில் தான் இந்த சாய் மாவு மில்லுக்கு உரிமம் வாங்கியுள்ளதாகவும், அதை வைத்து தான் விஜயலட்சுமி நகரில் மாவு மில் செயல்பட்டு வந்ததாகவும் கூறி பூந்தமல்லி நகராட்சி அலுவலகத்தில் ஆணையரிடம் பொதுமக்கள் சார்பாக கடந்த ஆண்டு மனு கொடுத்துள்ளனர். இந்த விஜயலட்சுமி நகரில் இந்த மாவு மில் இயங்கி வந்தது அருகில் குடியிருப்பவர்களுக்கு இரவு பகல் பாராது தொல்லையாக



இருந்து வந்ததுடன் குடியிருக்க முடியாமல் திண்டாடியும் போய் உள்ளனர். இந்த மில்லுக்குரிய மின்சார இணைப்பை துண்டித்திட வேண்டி மின் வாரிய அலுவலகத்திலும் புகார் கொடுத்துள்ளனர்.

பூந்தமல்லி நகராட்சி ஆணையர் இப்புகார் மனு மீது பெயரளவில் கூட விசாரணையோ உரிய நடவடிக்கையோ எடுக்காததால், வேறு வழி இன்றி பொதுமக்கள் சார்பில், தமிழக முதல்வரின் தனிப்பிரிவிற்கு கடந்த ஜூலை மாதத்தில் புகார் அளித்துள்ளனர்.

தமிழக முதல்வரின் தனிப்பிரிவில் பொதுமக்கள் சார்பாக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரிலும், பூந்தமல்லி நகராட்சி ஆணையர் கடந்த செப்டம்பர் மாதத்தில் மாவு மில் உரிமத்தை ரத்து செய்துள்ளார். ஆனால் மாவு மில் உரிமத்தை பூந்தமல்லி நகராட்சி ஆணையர் ரத்து செய்தாரே தவிர, அன்றிலிருந்து இன்றுவரை மாவு மில் இயங்கிக் கொண்டுதான் உள்ளது. இதற்கு காரணம் மாவு மில்லின் உரிமையாளர் சுப்பிரமணியன் என்பவர் திமுகவைச் சேர்ந்தவர் என்பதாலும்., நகராட்சி 20 வது வார்டு கவுன்சிலர் சௌந்தர்ராஜன் என்பவரின் அல்லக்கையாகவும் இருப்பதாலும், நகராட்சி சேர்மன் காஞ்சனா சுதாகரின் அனுதாபியாக இருப்பதாகவும், தொகுதி எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமியின் விசுவாசியாக இருப்பதாலும் தான் உரிமம் ரத்து செய்தும், மாவு மில் இயங்கி வருகிறது என்று பூந்தமல்லி வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.



கிருஷ்ணசாமி
எம்.எல்.ஏ



காஞ்சனா சுதாகர்
பூந்தமல்லி சேர்மன்



சவுந்தர்ராஜன்
20 வது வார்டு கவுன்சிலர்



சரவணகுமார்
பூந்தமல்லி நகராட்சி கமிஷனர்

இது இவ்வாறு இருக்க பூந்தமல்லி வாழ் பொதுமக்கள் சார்பாக, தமிழ் பிரஸ் கிளப் அமைப்பில் புகார் மனு அளித்துள்ளனர். இதன் அடிப்படையில் தமிழ் பிரஸ் கிளப் அமைப்பின் மாநில பொதுச் செயலாளர், பூந்தமல்லி நகராட்சி ஆணையரை அலைபேசியில் தொடர்பு கொண்டு விவரங்களை கூறிய போது, விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறினாரே தவிர, ஒரு மாத காலமாக எவ்வித விசாரணையோ, நடவடிக்கையோ இதுவரை இல்லை. 10 நாட்களுக்குப் பிறகு மறுபடியும் நகராட்சி ஆணையரை தமிழ் பிரஸ் கிளப் சார்பில் பலமுறை தொடர்பு கொண்டும் எவ்வித பலனும் இல்லை.

விரைவில் சட்டமன்றத் தேர்தல் வரவுள்ள நிலையில், திமுகவைச் சேர்ந்த 20 வது வார்டு கவுன்சிலர் சௌந்தர்ராஜனும், நகராட்சி சேர்மன் காஞ்சனா சுதாகரனும், தொகுதி எம்எல்ஏ கிருஷ்ணசாமியும் உரிமம் இல்லாத மாவு மில் இயங்குவதற்கு ஆதரவு கொடுத்து வருவது பொதுமக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருவதுடன், ஆளும் கட்சிக்கு பெருத்த அவப்பெயரை உண்டு பண்ணியுள்ளது.

இந்த விஷயத்தில் சிறப்பாக தமிழ்நாட்டை வழிநடத்தி வரும் தமிழக முதல்வர் நேரில் தலையிட்டு, நடவடிக்கை எடுத்திட வேண்டும் என பூந்தமல்லி பகுதி வாழ் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 3 நாடுகளுக்கு சுற்றுப்பயணம்: டில்லியில் இருந்து புறப்பட்டார் பிரதமர் மோடி

புதுடில்லி:, டிச.16-

3 நாடுகளுக்கு சுற்றுப்பயணமாக டில்லியில் இருந்து பிரதமர் மோடி புறப்பட்டு சென்றார்.

ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி 3 நாட்கள் சுற்றுப்பயணமாக இன்று காலை 9.40 மணக்கு டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு சென்றார். முதலில் பிரதமர் மோடி ஜோர்டான் நாட்டிற்கு செல்கிறார்.

ஜோர்டான் மன்னர் இரண்டாம் அப்துல்லா பின் அல் ஹுசைனை சந்தித்து, இந்தியாவிற்கும் ஜோர்டானுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவது




குறித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்த இருக்கிறார்.

பின்னர் அவர் டிசம்பர் 16ம் தேதி எத்தியோப்பியாவிற்கு செல்கிறார். இந்த பயணம் முடிந்த பிறகு, டிசம்பர் 17ம் தேதி ஓமன் நாட்டிற்கு பிரதமர் மோடி செல்கிறார். இந்தியாவும் ஓமனும் பல நூற்றாண்டுகள் பழமையான நட்புறவு, வர்த்தகம் மற்றும் இரு நாட்டு மக்களிடையே உறவை கொண்டுள்ளது. இது தொடர்பாக இரு நாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

நெருங்கிய கூட்டாளிகள்

இந்த பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி கூறியதாவது: அடுத்த மூன்று நாட்களில், ஜோர்டான், எத்தியோப்பியா மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறேன்.

இந்த மூன்று நாடுகளும் இந்தியாவின் நெருங்கிய கூட்டாளிகள். இந்த நாடுகளுடன் இந்தியாவுக்கு பழங்கால நாகரிகத் தொடர்புகளும், வலுவான இருதரப்பு உறவுகளும் உள்ளன. இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## தலைநகரில் நிலவும் கடும் பனிப்பொழிவால் விமான சேவைகள் பாதிப்பு

புதுடில்லி, டிச.16-

டில்லியில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. விமானங்களின் நிலை அறிந்து விமான நிலையத்திற்கு வருமாறு பயணிகளுக்கு விமான நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. குளிர்காலம் தொடங்கிய பிறகு டில்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால், வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டவாறு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், ஆங்காங்கே நெருப்பு மூட்டி பொதுமக்கள் குளிர் காய்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், கடும் பனிப்பொழிவு காரணமாக விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. விமானங்களின் நிலை அறிந்து டில்லி விமான நிலையத்திற்கு வருமாறு பயணிகளுக்கு இண்டிகோ மற்றும் ஏர் இந்தியா போன்ற விமான நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்; கடும் பனிபொழிவால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நாங்கள் வானிலையை தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம். உங்களைப் பாதுகாப்பாகவும், சரியான நேரத்திலும் கொண்டு சென்று விடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். எங்கள் வலைதளம் அல்லது செயலியின் மூலம் உங்கள் விமான நிலையை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். எங்கள் குழுவினர் உங்களுக்கு உதவுவார்கள், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியல்: மத்திய அமைச்சர் நிர்மலாவுக்கு 24வது இடம்

புதுடில்லி, டிச.16-

பிரபல, 'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள, 2025க்கான உலகின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உட்பட நம் நாட்டைச் சேர்ந்த மூன்று பெண்கள் இடம் பெற்று உள்ளனர்.



அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாகாணத்தை தலைமையிடமாக வைத்து செயல்படும் போர்ப்ஸ் பத்திரிகை, உலகின் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், 2025க்கான பட்டியலை அந்த பத்திரிகை நேற்று வெளியிட்டுள்ளது.

அதில், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் முதலிடம் பிடித்துள்ளார். ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் முதல் பெண் இவர்.

இந்த பட்டியலில், பா.ஜ., மூத்த தலைவரும், மத்திய நிதி அமைச்சருமான நிர்மலா சீதாராமன், 24வது இடத்தில் உள்ளார். நாட்டின் பொருளாதாரக் கொள்கையை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியதற்காக அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.

எச்.சி.எல்., நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ரோஷிணி நாடார் மல்ஹோத்ரா, 76வது இடத்தில் உள்ளார். நாட்டின் பணக்கார பெண் தொழிலதிபர்களில் ஒருவரான இவர், தமிழகத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஷிவ் நாடாரின் ஒரே மகள் ஆவார். கர்நாடகாவைச் சேர்ந்த 'பயோகான்' நிறுவனத் தலைவர் கிரண் மஜூம்தார் ஷா, 83வது இடத்தில் உள்ளார்.

# ராகுல் குறித்து சோனியாவிடம் புகார் அளித்த முன்னாள் எம்எல்ஏ காங்கிரஸில் இருந்து நீக்கம்




புவனேஸ்வர், டிச.16-

ராகுல் குறித்து சோனியாவிடம் கடிதம் மூலம் புகார் அளித்த ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவை கட்சியில் இருந்து நீக்கம் செய்து காங்கிரஸ் தலைமை உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரஸ் வலிமை இழந்து வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் தேசிய தலைவருமான சோனியாவுக்கு, ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவும், காங்கிரஸ் நிர்வாகியுமான முகமது மொகிம் என்பவர் கடிதம் எழுதியிருந்தார். மேலும், 5 பக்கம் கொண்ட கடிதத்தில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் ஆகியோர் மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தார்.கட்சியின் தலைமைக்கும், அடிமட்ட தொண்டர்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவேளை இருப்பதாகவும், 83வயதான கார்கேவால், இளைய சமுதாயத்தினருடன் இணைந்து செயல்பட முடியவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இதன் காரணமாகவே, ஜோதிராதித்ய சிந்தியா, ஹிமாந்த பிஸ்வா சர்மா போன்ற இளம் தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறி விட்டதாகவும், தொடர்ச்சியான தவறான முடிவுகள், மோசமான தலைமையும், பொறுப்பான பதவிகளை தகுதியற்றவர்களுக்கு வழங்கியதுதான் காங்கிரஸ் கட்சியின் தொடர் தோல்விக்கு காரணம் என்று வெளிப்படையாக குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்துமுகமது மொகிம் நீக்கப்படுவதாக அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளது. கட்சி விரோதசெயல்களில் ஈடுபட்டதாகக் கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உதட்டளவில் சமூகநீதி: அண்ணாமலை காட்டம்



சென்னை, டிச.16-

உதட்டளவில் சமூகநீதி பேசி ஊரை ஏமாற்றுவதில் காட்டும் ஆர்வத்தை, பட்டியல் சமூக மக்கள், மாணவர்கள் முன்னேற்றத்தில் முதல்வர் காட்ட வேண்டும் என்று பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.


அவரது அறிக்கை; ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் தமிழகம் முழுவதும் நடத்தப்படும் மாணவர் விடுதிகளில், 100க்கும் மேற்பட்ட விடுதிகள் மூடப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கிறது. தமிழகத்தில் இருந்த 1,331 ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளில், தற்போது, 1,200 மாணவர் விடுதிகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. 100க்கும் அதிகமான விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

சுமார் 98,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட இந்த விடுதிகளில், தற்போது, 65,000 மாணவர்கள் மட்டுமே தங்கி படித்து வருகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. சுத்தமான அறைகள், சுகாதாரமான குடிநீர், தரமான உணவு என்ற அடிப்படை வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படாததால், மாணவர்கள், இந்த விடுதிகளில் சேர்ந்து படிக்க விருப்பம் காட்டுவதில்லை.

குறிப்பாக, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு, தரமற்றதாக இருப்பதால், அது வீணாகி, கால்நடைகளுக்கு உணவாக விற்கப்படுவதை, ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம். பட்டியல் சமூக மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க வேண்டும் என இந்த மாணவர் விடுதிகள் அமைக்கப்பட்ட நோக்கத்தையே, திமுக அரசு சிதைத்து விட்டது.

பட்டியல், பழங்குடி சமூக மக்கள் முன்னேற்றத்துக்காக, மத்திய அரசு வழங்கும் நிதியைச் செலவிடாமல், ஆண்டுதோறும் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறது திமுக அரசு. அந்த நிதியை, இந்த விடுதிகளை மேம்படுத்தப் பயன்படுத்துவதிலிருந்து, திமுக அரசை எது தடுக்கிறது? இந்த அழகில், சமூக நீதி விடுதி என்று பெயர் மாற்றம் செய்தோம் என, இரண்டு நாட்கள் விளம்பர நாடகம் நடத்தி, தனக்குத் தானே பெருமை பேசிக் கொண்டிருந்தார் முதல்வர் ஸ்டாலின்.

உதட்டளவில் சமூகநீதி பேசி ஊரை ஏமாற்றுவதில் காட்டும் ஆர்வத்தை, பட்டியல் சமூக மக்கள், மாணவர்கள் முன்னேற்றத்தில் முதல்வர் காட்ட வேண்டும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



■ திண்டுக்கல்லில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு திண்டுக்கல் மாவட்ட வழக்கறிஞர் சங்கம் சார்பில் 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர் இணைந்து E-FILLNG முறையை கண்டித்து நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது

# தமிழக சட்டசபை தேர்தல்; அதிமுகவில் விருப்ப மனு வினியோகம் தொடக்கம்

சென்னை, டிச.16-

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலையொட்டி விருப்ப மனு வினியோகத்தை அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தொடங்கிவைத்தார். தேர்தலில் போட்டியிட விருப்ப மனுவை பூர்த்தி செய்து, இபிஎஸ் இடம் சேலம் மாவட்ட நிர்வாகிகள் வழங்கினர்.

தமிழக சட்டசபைத் தேர்தல் அடுத்தாண்டு நடக்க உள்ளது. வழக்கமாக ஜனவரி மாதத்துக்குப் பிறகுதான், அரசியல் கட்சிகள் தேர்தலை நோக்கி வேகமெடுத்து செயல்படும். டிசம்பர் மாதத்தின் மத்தியிலேயே, அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை நோக்கி விறுவிறுப்பு காட்டி வருகின்றன. ஏற்கனவே, அ.ம.மு.க.,வும் காங்கிரசும், விருப்ப மனு பெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில், இன்று (டிச.,15) தேர்தலில் போட்டியிட விருப்ப மனு வினியோகத்தை அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தொடங்கிவைத்தார். தேர்தலில் போட்டியிட விருப்ப மனுவை பூர்த்தி செய்து, இபிஎஸ் இடம் சேலம் மாவட்ட நிர்வாகிகள் வழங்கினர்.

கட்சியினர் வரும் டிசம்பர் 23ம் தேதி வரை விருப்ப மனு அளிக்கலாம். தினமும் காலை 10:00 முதல் மாலை 5:00 மணி வரை மனுக்களை பெறலாம். பூர்த்தி செய்து, 23ம் தேதி மாலை 5:00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

# சத்தமில்லாமல் புதுக்கட்சி தொடங்கிய ஓபிஎஸ்: டிச.23ம் தேதி முறைப்படி அறிவிக்க திட்டம்



சென்னை, டிச.16-

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சத்தமில்லாமல் புதுக்கட்சி தொடங்கி இருப்பதாக கூறப்படும் நிலையில், அது குறித்து வரும் டிச.23ம் தேதி மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசித்து முறைப்படி அறிவிக்க திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்க பழனிசாமி தொடர்ந்து மறுத்து வரும் நிலையில், ஓபிஎஸ் தலைமையில் கடந்த மாதம் நடைபெற்ற அதிமுக உரிமை மீட்புக்குழு மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், "இதுவரை அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழுவாக செயல்பட்டு கொண்டிருந்த அமைப்பு இனி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்பு கழகமாக செயல்படும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டிச.15ம் தேதி மீண்டும் மாவட்ட செயலாளர்களை கூட்டி, முக்கிய முடிவெடுக்கப்படும் என்று அந்த கூட்டத்தில் ஓபிஎஸ் கூறியிருந்தார்.

அதன் பின்னர் டிசம்பர் மாத தொடக்கத்தில் ஓபிஎஸ் டெல்லி சென்ற நிலையில், கட்சியை பதிவு செய்ய சென்றதாக கூறப்பட்டது. ஏற்கெனவே அறிவித்த கூட்டத்தை ஓபிஎஸ் தள்ளிவைத்திருந்த நிலையில், ஓபிஎஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையின் லெட்டர் பேடில் 'உரிமை மீட்பு குழு' என்பதற்கு பதிலாக 'உரிமை மீட்பு கழகம்' என மாற்றப்பட்டுள்ளது. முகவரியும் பசுமை வழிச்சாலைக்கு பதிலாக, நந்தனம் முகவரி கொடுக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் ஓபிஎஸ் சத்தமின்றி புதுக்கட்சியை தொடங்கிவிட்டதாக அவரது ஆதரவாளர்கள் மத்தியில் பேச்சு நிலவுகிறது.

மேலும் ஓபிஎஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில், மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில், சென்னை வேப்பேரியில் உள்ள ஒய்எம்சிஏ அரங்கில் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் டிச.23ம் தேதி மாலை 5 மணிக்கு நடைபெற இருப்பதாக அறிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் அல்லது அடுத்த நாள் வரும் எம்ஜிஆர் நினைவு தினத்தில் முறைப்படி புதுக்கட்சியை அறிவிக்க ஓபிஎஸ் திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இது குறித்து ஓபிஎஸ் ஆதரவாளர்களிடம் கேட்டபோது, "கட்சி ஒன்றிணைப்புக்கு பழனிசாமி முட்டுக்கட்டையாக உள்ளார். தேர்தல் நெருங்கி வருகிறது. தன்னை நம்பி வந்தவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய கடமை ஓபிஎஸ்ஸுக்கு இருக்கிறது.

அதனால் விரைந்து ஒரு முடிவை எடுக்க வேண்டியுள்ளது. எனவே, முந்தைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குழுவானது, கழகமாக மாறியுள்ளது. அது தொடர்பாக டிச.23ம் தேதி நிர்வாகிகளுடன் விவாதித்து ஓபிஎஸ் முக்கிய அறிவிப்பை வெளியிட இருக்கிறார்" என்றனர்.

# திருப்பரங்குன்றம் தீப வழக்கு: 2வது நாளாக ஐகோர்ட் கிளையில் விசாரணை



மதுரை, டிச.16-

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என நீதிபதி சுவாமிநாதன் உத்தரவை எதிர்த்த, தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை இன்று (டிசம்பர் 15) 2வது நாளாக நடந்து வருகிறது.

மதுரை, திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்துணில், கார்த்திகை தீபம் ஏற்ற மதுரை மாவட்டம், எழுமலையை சேர்ந்த ராம ரவிகுமார் தொடுத்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபத்தூணில் தீபம் ஏற்ற உத்தரவிட்டார். இந்த உத்தரவை நிறைவேற்றாததால், ராம ரவிக்குமார் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபத்தூணில் தீபம் ஏற்றவில்லை. பிற மனுதாரர்கள் உட்பட, 10 பேரை மனுதாரர் அழைத்துச் செல்லலாம். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சி.ஐ.எஸ்.எப்., வீரர்களை அனுப்ப உயர்நீதிமன்ற சி.ஐ.எஸ்.எப்., கமாண்டன்டிற்கு உத்தரவிடுகிறேன்' என்றார். நீதிபதி சுவாமிநாதன் உத்தரவை எதிர்த்து, ஐகோர்ட் மதுரைக்கிளையில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது.இந்த வழக்கு இன்று மீண்டும் 2வது நாளாக ஐகோர்ட் மதுரைக்கிளை இரு நீதிபதிகள் அமர்வு முன் நடந்து வருகிறது.

# சிட்னியில் பயங்கரவாத தாக்குதல்: ஆஸ்திரேலிய அமைச்சரிடம் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் போனில் பேச்சு

புதுடில்லி, டிச.16-

ஆஸ்திரேலியாவில் நடந்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சரிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் போனில் தொடர்பு கொண்டு பேசி ஆறுதல் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் பிரபலமான சுற்றுலா தலமான பாண்டை கடற்கரையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தந்தை சஜித் அக்ரம் 50, மகன் நவீத் அக்ரம் 24 ஆகிய இரண்டு பேர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலக தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இன்று (டிச.,15) ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் செனட்டர் பென்னி வோங் இடம் ஜெய்சங்கர் போனில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இது குறித்து ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் செனட்டர் பென்னி வோங் உடன் சற்று முன்பு பேசினேன். பாண்டி கடற்கரையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தேன், மேலும் முழு ஆதரவை தெரிவித்தேன். இவ்வாறு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.



# பஹல்காம் தாக்குதல் சம்பவம்; குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறது என்ஐஏ

புதுடில்லி, டிச.16-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) இன்று சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறது.

ஜம்மு காஷ்மீரின் சுற்றுலா தலமான பஹல்காமில் கடந்த ஏப்., 22ல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் துணை அமைப்பான, 'தி ரெசிஸ்டென்ஸ் பிரன்ட்' பொறுப்பேற்றது.

கடந்த ஜூலையில் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் பஹல்காம் சம்பவத்தில் தொடர்புடைய மூன்று பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை ஆய்வு செய்தபோது, காஷ்மீரை சேர்ந்த நபர் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து குல்காமை சேர்ந்த கட்டாரியா, 26, என்பவரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில், உள்ளூர்வாசிகளான பஷீர் மற்றும் பர்வேஸ் ஜோதர் கைது செய்யப்பட்டனர்.அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில், சிறப்பு நீதிமன்றத்தில் என்ஐஏ அதிகாரிகள் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இருக்கின்றனர்.

குற்றப்பத்திரிகையில் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு உதவிய உள்ளூர்வாசிகள் பெயர்கள் இடம்பெறும் என என்ஐஏ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# அம்பாத்துரை ஊராட்சி இராமநாதபுரம் குடியிருப்புகளுக்கு பேவர் பிளாக் சாலை வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

## மொழிப்போர் தியாகி. இராமுராமசாமிக்கு மருத்துவ சிகிச்சைக்காக நிதி உதவி அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்



சின்னாளபட்டி, டிச.16

அம்பாத்துரை ஊராட்சி இராமநாதபுரம் வடக்குபகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு பேவர் பிளாக் கற்கள் சாலை வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோடு சின்னாபட்டியைச் சேர்ந்த மொழிப்போர் தியாகி. இராமுராமசாமிக்கு மருத்துவ சிகிச்சைக்காக நிதி உதவி அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். அப்போது அம்பாத்துரை ஊராட்சி ஏ.ராமநாதபுரம் வடக்கு பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் தங்கள் பகுதிக்கு பேவர்பிளாக்சாலை, தெருக்களுக்கு மின் விளக்கு வசதி, மற்றும் தங்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள சக்தி மாரியம்மன் கோவிலுக்கு, ஆழ்துளைக் கிணறு வசதி, சுற்றுச்சுவர் வசதி செய்து கொடுப்பதுடன் அருகில் உள்ள குளத்தை தூர் வார வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உடனடியாக நிறைவேற்ற அதிகாரிகளுக்கு உத்திரவிட்டதுடன் அப்பகுதிக்கு சென்று பொதுமக்களின் அத்தியாவசிய கோரிக்கைகளை கேட்டு நிறைவேற்ற வேண்டும் என்றார். தங்கள் கிராமத்தின் கோரிக்கையை நிறைவேற்ற உத்திரவிட்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு இராநாதபுரம் வடக்கு பகுதி (தேவர் சமுதாய மக்கள்) மனதார பாராட்டி நன்றி தெரிவித்தனர். அப்போது சின்னாளபட்டியைச் சேர்ந்த மொழிப்போர் தியாகியும், மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவருமான இராமுராமசாமி அவர்கள் தனக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கவேண்டுமென அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இராமுராமசாமிக்கு நிதி உதவி வழங்கியதுடன் மருத்துவ சிகிச்சைக்காக ஏற்பாடு செய்தார். தனக்கு நிதி உதவி வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மொழிப்போர் தியாகி இராமுராமசாமி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், மணிகண்டன், பிள்ளையார்நத்தம் முருகேசன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் டென்னி, அக்பர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் நந்தகோபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுமதி கணேசன், நாகவள்ளி, காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த சித்தயன்கோட்டை மரக்காயர், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி, நந்தி நடராஜன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறுசேமிப்புத் திட்டங்களில் அதிக வசூல் சாதனை புரிந்த முகவர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். மதுரை மாவட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் அஞ்சலக சிறுசேமிப்பு திட்டங்களில் ரூபாய் 7066.11 கோடி வசூல் சாதனை எய்தப்பட்டுள்ளது.



■ அனைத்துத்றை சங்கங்களின் கூட்டமைப்பு மாநில கள அமைப்பாளர் கூட்டம் திருச்சி ஆனந்த மினி ஹால் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வருவாய்த்துறை அலுவலக சங்கத்தின் மாநில தலைவர் பி.கே.சிவகுமார், நில அளவை துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில தலைவர் வெ.மகேந்திர குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு அனைத்து அரசு அலுவலர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட சிறப்பித்த பொழுது அருகில் இணைப்பு சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோ அருகில் உள்ளனர்.




# திருப்பூர் காந்திநகரில் மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சாதனை

திருப்பூர். டிச16-

மாநில அளவிலான கால்பந்து போட்டி காந்திநகரில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது. இதில் எமது கிட்ஸ் கிளப் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் 16 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் கலந்து கொண்டு மூன்றாம் இடம் பெற்றனர். வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களை பள்ளி தலைவர் மோகன் கே கார்த்திக், தாளாளர் வினோதினி கார்த்திக், செயலாளர் நிவேதிகா ஸ்ரீராம், இயக்குனர் ஐஸ்வர்யா நிக்கில் சுரேஷ், பள்ளி முதல்வர் செந்தில்குமார், உடற்கல்வி ஆசிரியர் சண்முக நதி, ராஜ் குமார் மற்றும் அஜித் குமார் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# கேரளாவில் பெற்ற வெற்றி தமிழகத்திலும் எதிரொலிக்கும்: நயினார் நாகேந்திரன் நம்பிக்கை

சென்னை, டிச.16-

கேரளாவில் திருவனந்தபுரம் மாநகராட்சி தேர்தலில் பாஜ பெற்ற வெற்றி விரைவில் தமிழகத்திலும் எதிரொலிக்கும் என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: கேரளாவில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் திருவனந்தபுரம் மாநகராட்சியை பாஜ கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. 45 ஆண்டுகளாகத் தோற்கடிக்கவே முடியாது என்ற இறுமாப்புடன் இருந்த கேரள இடது சாரி முன்னணியை பாஜ தனித்து களம் கண்டு திருவனந்தபுரம் மாநகராட்சியைக் கைப்பற்றியுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் பல்வேறு உள்ளாட்சிகளில் பாஜ கால் பதித்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றிக்குக்



காரணம் பிரதமர் மோடி மீது உள்ள மக்களின் நம்பிக்கையும், கேரள பாஜ தொண்டர்களின் தொய்வில்லாத உழைப்பும்தான்.

பூத் கமிட்டி உறுப்பினர்களின் இடைவிடாத உழைப்பின் காரணமாகக் கிடைத்த பாஜகவின் இந்த அபார வெற்றி தமிழக பாஜகவிற்குப் புது உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. தமிழகத்திலும் பாஜ எல்லா சட்டசபை தொகுதியிலும் பூத் வாரியாக கமிட்டிகளை நியமித்துவிட்டது. அவர்களுக்கான பயிற்சியும் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப்பணி நடந்து வருகிறது. விரைவில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும். அப்போது பூத் கமிட்டி உறுப்பினர்கள் தங்கள் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியலைச் சரி பார்க்க வேண்டும்.

தகுதியில்லாத புது வாக்காளர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தால் அதனை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரளாவில் பெற்ற வெற்றி விரைவில் தமிழகத்திலும் எதிரொலிக்கும். தமிழகத்திலும் ஆளும் கட்சிக்கு எதிரான மன நிலை மக்களிடம் காணப்படுகிறது. அதனை நாம் முறையாகப் பயன்படுத்தி தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வரவிருக்கும் சட்டசபை தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தருவோம். பிரதமர் மோடிக்கு அவ்வெற்றியைச் சமர்ப்பிப்போம். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# நியாயத்துக்காக போராட முன்வருகின்ற விவசாய சங்க தலைவர்கள் சமூக அக்கறை கொண்ட தன்னார்வலர்கள் விவசாயிகள் மத்தியில் தீர்ப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

தேனி, டிச.16-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முல்லைப்பெரியாறு வைகை பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் வக்கீல் விரிவி. முத்துராமலிங்கம் தலைமையில் பொதுச்செயலாளர் ஆதிமூலம், வக்கீல்கள் பாண்டிமணி, மலை முருகன் உள்பட பலர் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோரிக்கை மனு ஒன்று கொடுத்துள்ளனர்.




காவிரி டெல்டாவில் விவசாயிகளுக்காக தொடர்ந்து மண்ணையும் மக்களையும் பாதுகாக்க தொடர்ந்து போராடி வரும் விவசாய சங்க தலைவர் பாண்டியன் மற்றும் செல்வராஜ் அவர்களுக்கு திருவாரூர் மகளிர் நீதி மன்றம்13 ஆண்டுகால சிறை தண்டனை வழங்கியுள்ளது.

இந்நிலையில், பாண்டியன் மற்றும் செல்வராஜ் அவர்கள் மீது வழங்கப்பட்டுள்ள இந்த தீர்ப்பு நியாயத்துக்காக போராட முன்வருகின்ற விவசாய சங்க தலைவர்கள் சமூக அக்கறை கொண்ட தன்னார்வலர்கள் விவசாயிகள் மத்தியில் இத்த தீர்ப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. திருவாரூர் மாவட்டம் விக்கிரபாண்டியம் காவல் நிலையத்தில் தொடரப்பட்ட பொய் வழக்கினை தென்னிந்திய பசுமை தீர்பாயத்தில் பசுமை தீர்பாயமே இது பொய் வழக்கு என்பதை உறுதிபடுத்தும் வகையில் ஓ.என்.ஜி.சியின் பணிகளுக்கு அப்போது தடை விதித்தது. மேலும் தமிழக அரசு காவிரிடெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது. டெல்டா மாவட்டங்களில் மத்திய, மாநில அரசுகளும் புதிய திட்டம் தொடர்வதை அனுமதிக்காமலும் இருந்து வரும் இந்த சூழலில் நீதி மன்ற தீர்ப்பு விவசாயிகள் பொதுமக்கள் மத்தியில் பெறும் கொந்தளிப்பையும் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளும் சூழலை உருவாக்கியுள்ளது. எனவே, மாவட்ட கலெக்டர் அவர்கள் விவசாயிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமிழக அரசு மேல்முறையீடு செய்து மண்ணையும் மக்களையும் பாதுகாக்க போராடிய போராளி பாண்டியன் மற்றும் செல்வராஜ் அவர்களை அந்த வழக்கில் இருந்து விடுவிக்க விவசாயிகளின் கோரிக்கை மனுவை பரிந்துரை செய்ய வேண்டுகிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

# பார்லிமென்டில் எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளி: லோக்சபா ஒத்திவைப்பு

புதுடில்லி, டிச.16-

பார்லிமென்டில் லோக்சபாவில் எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதால் மதியம் 2 மணி வரை ஒத்திவைத்து ஓம் பிர்லா உத்தரவிட்டார்.



பார்லியில் குளிர்கால கூட்டத்தொடர் நடந்து வருகிறது. எஸ்.ஐ.ஆர்., பணி, வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு உட்பட பல்வேறு விவாதங்களில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் இடையே அனல் பறக்கும் விவாதங்கள் நடந்து வருகின்றன. பல்வேறு முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்த சூழலில் இன்று (டிச 12) காலை 11 மணிக்கு லோக்சபா கூடியது. அவை கூடியதும், காங்கிரஸ் பேரணியில் பிரதமர் மோடிக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டது குறித்து லோக்சபா எம்பி ராகுல், மூத்த தலைவர் சோனியா உள்ளிட்டோர் மன்னிப்பு கேட்க வேண்டும் என மத்திய அமைச்சர்கள் கிரண் ரிஜிஜூ, ஜே.பி.நட்டா பேசுகையில் தெரிவித்தனர்.

பின்னர் காங்கிரஸ் எம்பிக்கள் உட்பட எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதால் அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. சபாநாயகர் ஓம்பிர்லா அமைதியாக இருக்குமாறு எம்பிக்களிடம் கேட்டு கொண்டார். ஆனால் தொடர்ந்து அமளி நீடித்ததால், அவையை 12 மணி வரை ஓம்பிர்லா ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை 12 மணிக்கு கூடியது எதிர்க்கட்சி எம்பிக்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. அதேபோல் ராஜ்யசபாவிலும் எதிர்க்கட்சி தலைவர் கார்கே உள்ளிட்ட காங்கிரஸ் எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதால், அவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் 12 மணிக்கு ராஜ்யசபா கூடி நடந்து வருகிறது. அவையை ராஜ்யசபா தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நடத்தி வருகிறார்



# சிங்கப்பூரில் ஆடம்பர பொருட்களுக்கு அதிக செலவு; இந்தியர்கள் முதலிடம்

சிங்கப்பூர், டிச.16-

சிங்கப்பூரில் ஆடம்பர பொருட்களை வாங்க அதிகம் செய்ததில் இந்திய சுற்றுலாப் பயணிகள் முதலிடத்தில் உள்ளனர்.

சிங்கப்பூர் சுற்றுலா வாரியம் வெளியிட்ட தகவலின்படி, 2025ம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் சிங்கப்பூரில் 5 ஆயிரத்து 700 கோடி ரூபாயை இந்திய சுற்றுலாப் பயணிகள் செலவழித்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட 4.40 சதவீதம் அதிகமாகும். இந்தியர்களைப் போன்றே, சீனா மற்றும் இந்தோனேசியா நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் சிங்கப்பூரில் ஆடம்பர பொருட்களுக்காக அதிகம் செலவழிக்கின்றனர்.

சிங்கப்பூரின் மிகப்பெரிய வர்த்தக சந்தையான ஆர்ச்சர்டு ரோடு வர்த்தக சங்கத்தினர் கூறுகையில், ' எங்களின் வர்த்தகப் பகுதிகள் இந்தியர்களுக்கு தொடர்ச்சியான மிகப்பெரிய வர்த்தக சந்தையாக திகழ்ந்து வருகிறது. சிங்கப்பூரில் ஆடம்பரப் பொருட்களுக்கு அவர்கள் அதிகம் செலவிடுகிறார்கள். அதேபோல, முன்பை விட தற்போது நீண்ட நாட்கள் இங்கு தங்கி பொழுதை கழிக்கின்றனர். இதனால், உணவகம், பொழுதுபோக்கு, சுற்றுலா தலங்கள் மற்றும் விடுதி என அவர்களின் பிற செலவுகளும் அதிகரிக்கிறது,' என்றனர்.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் சிங்கப்பூருக்கான இந்திய பார்வையாளர்களின் வருகை 10 லட்சத்து 30 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக சிங்கப்பூர் சுற்றுலா வாரியம் தெரிவித்துள்ளது. இது கடந்தாண்டை விட 2.6 சதவீதம் அதிகமாகும். ஒட்டுமொத்தமாக ஜனவரி முதல் அக்டோபர் வரையில் ஒரு கோடியே 42 லட்சம் சுற்றுலாப் பயணிகள் சிங்கப்பூருக்கு வந்துள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 2.5 சதவீதம் அதிகம்.

# “தவெகவுக்கு வழங்கப்படும் சின்னம் 15 நிமிடத்தில் உலகப் புகழ் பெறும்” புஸ்ஸி ஆனந்த் சஸ்பென்ஸ்

நாமக்கல், டிச.16-

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தவெக ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடுவார் எனவும், அவரை மூத்த தலைவர்களான செங்கோட்டையன் மற்றும் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் இக்கூட்டத்தில் அறிமுகப்படுத்துவார்கள் எனவும் தகவல் வெளியானது.



இந்த நிலையில், திருச்செங்கோட்டில் நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், “ஒவ்வொரு தொகுதியிலும் விஜய்யின் அறிவுறுத்தலின்படி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி, திருச்செங்கோட்டில் நடைபெறுகிறது.

தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மட்டும் தான் அறிவிப்பார். ஊடகவியலாளர்கள் தயவு செய்து எதையாவது ஒன்றை போட்டுவிடாதீர்கள். வரும் 2026ம் ஆண்டு தேர்தலில் தவெக தலைவர் விஜய் முதல்வராக வருவார். எந்த கட்சியாவது எங்களைப்போல் மாநாடு நடத்த முடியுமா.

மற்ற கட்சிகள் எல்லாம் ரூ.200, ரூ.300 கொடுத்து தான் கூட்டம் கூட்ட வேண்டும். யாருக்காவது தைரியம் இருந்தால் பணம் கொடுக்காமல் கூட்டம் போடுங்கள், அனைவரும் வாருங்கள் என சொல்லுங்கள் வருவார்களா என பார்ப்போம். ஆனால் தவெக தலைவர் விஜய் வந்தால் கூட்டம் தானாக வந்துவிடும்.

தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தலைவர் விஜய் தான் வேட்பாளர். விஜய் சினிமாத்துறையில் உச்சத்தை விட்டுவிட்டு தமிழக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என வந்துள்ளார்.

தமிழகத்தில் புயல், மழை என எந்த பாதிப்பு வந்தாலும் தவெக பாடுபடும். தமிழகம் இக்கட்டான சூழலில் உள்ளது. தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து ஏமாற்றி விட்டார்கள் என மக்கள் நினைக்கின்றனர். அதன் வெளிப்பாடு தான் இங்கு கூடியுள்ள கூட்டம். மின் கட்டண உயர்வால் விசைத்தறிக் கூடங்கள் மூடுவிழா கண்டுவிட்டது. கூடிய விரைவில் தவெகவுக்கு அருமையான சின்னம் வழங்கப்பட உள்ளது. சின்னம் வந்த 15 நிமிடத்தில் அது உலகப் புகழ் பெறும்.” என்றார்.

கட்சியின் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் பேசும்போது, ‘‘வரும்சட்டப்பேரவை தேர்தலில் தவெக வரலாறு படைக்கும். கூட்டணியை வரவேற்கிறோம். ஆனால் விஜய்யை முதல்வராக ஏற்று கொள்பவர்களை மட்டுமே நாங்கள் ஏற்று கொள்வோம்.

ஒரு இயக்கம் நன்றாக வளர வேண்டும் என்றால் அதற்கு நல்ல தலைமை வேண்டும். அது விஜய்யால் மட்டுமே முடியும். கடந்த 50 ஆண்டுகளாக ஒரே இயக்கத்திலும், 9 முறை எம்எல்ஏவாகவும் பணியாற்றி இருக்கிறேன். சமுதாய முன்னேற்றத்துக்கு விஜய் முக்கிய பங்காக இருப்பார்’’ என்றார்.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், மாவட்ட செயலாளர்கள் செந்தில்நாதன், சதீஸ், பிரதீப் உள்பட கட்சியின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் முகாம் மாவட்ட ஆட்சியர் திரு சரவணன் தலைமையில் நடைபெற்றது. உடன் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்



■ தேனி மாவட்டம் 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி தேனிஅல்லிநகரம் நகராட்சிப் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 (SIR) பணிகள் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்த (SIR 2026) வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் விஜய் நெஹ்ரா, (இணைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, புதுதில்லி) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மறு ஆய்வு மேற்கொள்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# முல்லைப் பெரியாறு அணையை துணை கண்காணிப்பு குழு ஆய்வு

தேனி டிச.16-

தமிழக கேரளா எல்லைப் பகுதியில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தென் மண்டல இயக்குனரும் துணை கண்காணிப்பு குழு தலைவருமான கிரிதர் தலைமையில் தமிழ்நாடு மற்றும் கேரள அரசு பிரதிநிதிகள் அடங்கிய முல்லைப் பெரியாறு அணை துணை கண்காணிப்பு குழு காலை முதல் ஆய்வு செய்துள்ளனர்

முல்லைப் பெரியாறு அணையில் பருவநிலை மாற்றத்தின் போதும் முல்லைப் பெரியாறு அணையில் அணையின் உறுதித் தன்மை நீர்க்கசிவு ஷட்டர் பகுதி கேலரி பகுதி பேபி அணை வல்லக்கடவு சாலை என பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநில அதிகாரியுடன் ஆலோசனை நடத்துவது வழக்கம்.

அதன் பின்பு ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் ஆய்வின் அறிக்கையை ஒன்றிய அரசின் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்திடம் கண்காணிப்பு குழு சமர்ப்பித்து அணையின் உறுதித்தன்மை நீர்க்கசிவு பேபி அணி ஷட்டர் பகுதி ஆகியவற்றினை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டு வந்து அதனை மத்திய அரசிடம் வழங்குவர்

உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் உத்தரவின்படி தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் அணில் ஜெயின் தலைமையில் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநில அரசுகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய புதிய மத்திய கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது.

மேலும் புதிய கண்காணிப்பு குழு கடந்த மார்ச் 22 மற்றும் நவ10 தேதிகளில் அணையை ஆய்வு செய்து அதன் பின்பு இரு மாநில அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியது.




■ தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 (SIR) பணிகள் தொடர்பாகசிறப்பு தீவிர திருத்த (SIR 2026) வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் விஜய் நெஹ்ரா, (இணைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, புதுதில்லி) தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டக்கால்வாய்களை சிறப்பு தூர்வாரும் பணிக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்த முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழா



பரம்பிக்குளம், டிச.16-

பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டக்கால்வாய்களை சிறப்பு தூர்வாரும் 154 பணிக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்த முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நீர்வளத்துறை அமைச்சர் கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் திட்டக்குழுவின் சார்பில் நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் பணி துவக்க விழாவானது,

கழகத் துணைப் பொதுச் செயலாளர்; தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள், மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்வழி செல்வராஜ் அவர்கள், திருப்பூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர்; பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி அவர்கள், திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்; திருப்பூர் மாநகராட்சி நான்காம் மண்டல குழு தலைவர் இல. பத்மநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.


இந்நிகழ்வில், திருப்பூர் தெற்கு மாவட்ட அவை தலைவர் ஜெய ராமகிருஷ்ணன் அவர்கள், இந்நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற முழு ஒத்துழைப்பு நல்கிய குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சா.ராஜமாணிக்கம் அவர்கள், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் கிரி அவர்கள், உடுமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மெய்ஞானமூர்த்தி அவர்கள், உடுமலை மத்திய ஒன்றிய செயலாளர் திரு. செந்தில்குமார் அவர்கள், மாவட்ட விவசாய அணி தலைவரும் திட்ட குழு உறுப்பினருமான அருண் அவர்கள், திட்ட குழு உறுப்பினர்கள் குருசாமி, நித்யானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி அவர்கள், தலைமை பொது குழு உறுப்பினர் திருமதி பர்வதவர்த்தினி அவர்கள் பிஏபி தலைவரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான சியாம் பிரசாத் அவர்கள் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கோட்டமங்கலம் கே. ஆர்.கார்த்திகேயன் அவர்கள் மற்றும் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் விவசாயிகள் பாசன சபை தலைவர்கள் பொதுமக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கோட்டமங்கலம் க.ரவி தலைவர் மற்றும் பகிர்மான குழு உறுப்பினர் கோட்டமங்கலம் நீரினை பயன்படுத்துவோர் சங்கம்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 80 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 1,00,2000 மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் வழங்கினார்/



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.



# சின்னமனூர் அருள்மிகு ஸ்ரீ விலங்கையா சாமி திருக்கோவில் மகாபிஷேகம் விழா

தேனி டிச.16-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா சின்னமனூர் பகுதியில் உள்ள அருள்மிகு விலங்கையா சாமி திருக்கோயிலில் மகாபிஷேகம் விழா இந்து அறநிலைத்துறை சார்பில் நூதன அஷ்ட பந்தன மகாபிஷேகம் விழா நடைபெற்றது.

முதல் நாள் கணபதி ஹோமத்துடன் முதல்கால பூஜை துவங்கி யாகசாலையில் நான்கு கால பூஜைகள் மங்கள வாத்தியம் விஷ்ணு ஷஹஸ்ர ராமம் சேவித்தல், விஷ்வச்சேனர் பூஜை, வர்ண கலச பூஜை, வாஸ்து ஹோமம், குடும்ப அலங்காரம், துவாரபாலகர் பூஜை, ஆச்சாரியார்கள் வேத மந்திரம் முழங்க பூஜைகள் நடைபெற்றது.

இதையடுத்து பக்தர்கள் மகாபிஷேகம் செய்யப்பட்ட புனித நீர் தெளிக்கப்பட்டது.மகாபிஷேகத்திற்கு சின்னமனூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மட்டுமன்றி பல்வேறு பகுதியிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.இந்நிகழ்வை, இந்து அறநிலைத்துறையினர் சார்பாக செய்திருந்தனர்.




# திருப்பூர் தெற்கு தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.. சு.குணசேகரன் நினைவாக மக்கள். குணசேகரன் அறக்கட்டளை சார்பில் மருத்துவ முகாம்

திருப்பூர், டிச.16-

திருப்பூர் தெற்கு தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.. சு.குணசேகரன் நினைவாக, மக்கள் நண்பன் சு.குணசேகரன் சமூக நல அறக்கட்டளையை அவரது மனைவி கவிதா குணசேகரன் தொடங்கி உள்ளார். அந்த அறக்கட்டளை சார்பில், காந்தி நகர் ரோட்டரி சங்கம், ரேவதி மருத்துவமனை, ஐ பவுண் டேசன் மருத்துவ மனைகளுடன் இணைந்து மாபெரும் மருத்துவ முகாம் திருப்பூர் பனிரெண்டார் திருமண மண்டபத்தில் நடந்தது.

முன்னாள் எம்.எல்.ஏ., சு.துரைசாமி, அகில் ரத்தினசாமி, காடேஸ்வரா சுப்பிரமணியம், மோகன் கார்த்திக், டாக்டர் ஈஸ்வரமூர்த்தி, கவிதா குணசேகரன், பூமிஷ் குணசேகரன், கோகுலப்பிரியா குணசேகரன், கேசவன், கே.பி.ஜி கோவிந்தசாமி உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். இந்த மருத்துவ முகாமில் 1350 பேர் பங்கேற்று பொது பரிசோதனைகள் செய்து கொண்டனர். 62 பேர் ரத்த தானம் செய்தனர். 82 பேருக்கு காது மூக்கு தொண்டை பரிசோதனையும், 195 பேருக்கு இருதய பரிசோதனையும் என மொத்த ஆயிரத்து 689 பேருக்கு உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டது.



# திருப்பூர் மும்மூர்த்தி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கான பூமிபூஜை

அனுப்பர்பாளையம், டிச.16-

திருப்பூர் மாநகராட்சி 8வது வார்டுக்கு உட்பட்ட மும்மூர்த்தி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த 246 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.11 ஆசிரியர்களும் உள்ளனர். ஆனால், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 10 வகுப்பறைகள் தேவைப்படும் பட்சத்தில், தற்போது 6 வகுப்பறைகள் மட்டுமே உள்ளது. இதனால் மாணவ, மாணவிகள் வகுப்பறையில் நெருக்கடியுடன் அமர்ந்து பாடங்களை கற்று வருகின்றனர்.இந்நிலையில்,போயம்பாளையம் ரோட்டரி கிளப் சார்பில், 25 லட்சம் ரூபாய் மதிப்பில், இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டுவதற்காக பூமி பூஜை விழா இன்று காலை நடந்தது.

இவ்விழாவில், கவுன்சிலர் வேலம்மாள் காந்தி, ரோட்டரி கிளப் ஆளுநர் தனசேகரன், போயம்பாளையம் ரோட்டரி கிளப் தலைவர் ரவிச்சந்திரன்,மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆனந்தஜோதி, உதவி ஆளுநர் கணேசமூர்த்தி. செயலாளர் ஜெகதீசன். பள்ளி தலைமை ஆசிரியர் ( பொறுப்பு) சிஜூ மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000